## ஸ்ரீ ஜயவர்த்தனபுர பொது வைத்தியசாலைச் சபை – 2017

ஸ்ரீ ஜயவர்த்தனபுர பொது வைத்தியசாலைச் சபையின் 2017 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதன மாற்றக் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளிக்கும் தகவல்களது பொழிப்பினை உள்ளடக்கிய 2017 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1983 ஆம் ஆண்டின் 54 ஆம் இலக்க ஸ்ரீ ஜயவர்த்தனபுர பொது வைத்தியசாலைச் சபை அதிகாரச் சட்டத்தின் 12 ஆம் பிரிவினது 3 ஆம் உப பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம், எனது பணிப்பின் கீழ், கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச் சட்டத்தின் 14(2) (சீ) பிரிவின் பிரகாரம் சபையின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புரைகளும் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க மேற்கொள்ளப்படும் கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்கள் மீதான அபிப்பிராயத்தை வழங்குவது எனது பொறுப்பாகும்.

### 1.4 அபிப்பிராய மறுப்பிற்கான அடிப்படை

இவ்றிக்கையின் 2.2 ஆம் பந்தியில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களின் பெறுபேறாக நிதி நிலமைக்கூற்றிலும் நிதிச்செயலாற்றல் கூற்றிலும் உரிமை மூலதன மாற்றக் கூற்றிலும் காசுப் பாய்ச்சல் கூற்றிலும் அறிக்கையிடப்பட்ட அல்லது அறிக்கையிடப்படாத விடயங்களும் மூலாதாரங்களுக்குரிய எந்தவொரு சீராக்கல்களுக்குமான அவசியம் இருந்ததா என்பதை என்னால் தீர்மானிக்க முடியாது போனது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராய மறுப்பு

இவ்வறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களின் காரணமாக கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையை வழங்குவதற்கு போதுமான மற்றும் உசிதமான கணக்காய்வுச் சான்றை என்னால் பெற முடியாதுள்ளது. அதன் காரணமாக, இந்நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக நான் அபிப்பிராயத்தைத் தெரிவிக்கவில்லை.

## 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 இலங்கை பொதுத் துறைக் கணக்கீட்டு நியமங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

#### (அ) இலங்கை பொதுத் துறைக் கணக்கீட்டு நியமம் 1

(i) நியமத்தின் 38 ஆம் பந்தியின் பிரகாரம், நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கையில் நிறுவனம் தொடர்ந்து இயங்குவதற்கான ஆற்றல் மதிப்பீடு செய்யப்பட்டிராததுடன், நியமத்தின் 132(இ) பந்தியின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் எந்த அடிப்படையில் தயாரிக்கப்பட்டன என்பது தெரியப்படுத்தப்படவுமில்லை.

(ii) நியமத்தின் 48 ஆம் பந்தியின் பிரகாரம், இலங்கை பொதுத் துறைக் கணக்கீட்டு நியமத்தின் மூலம் தேவைப்பட்டோ அல்லது அனுமதி வழங்கப்பட்டோ இருந்தாலன்றி சொத்துக்களோ அல்லது பொறுப்புகளோ எதிரீடு செய்யப்படலாகாது. எவ்வாறாயினும், 2017 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான ரூபா 448,671 வங்கி மேலதிகப் பற்று அத்தினத்தில் உள்ளவாறான காசு மற்றும் காசுக்கு நிகரானவற்றின் மொத்தப் பெறுமதியாகிய ரூபா 59,215,119 மீதியிலும் வைத்தியசாலைக் கட்டணக் கடன்பட்டோர் கணக்குகளில் உள்ள செலவு மீதியாகிய ரூபா 27,373,267 வைத்தியசாலைக் கட்டணக் கடன்பட்டோர் கணக்குகளில் உள்ள ரூபா 286,765,620 வரவு மீதியிலும் எதிரீடு செய்யப்பட்டு நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தன.

(iii) நியமத்தின் 95 (இ) பந்தியின் பிரகாரம், உரிமை மூலதனத்தில் நிலவும் ஒவ்வொரு ஒதுக்கத்தினதும் தன்மை மற்றும் நோக்கம் தொடர்பான விபரம் நிதிக்கூற்றுக்களில் தெரியப்படுத்தப்பட வேண்டுமாயினும், 2017 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான ரூபா 2,280,000 மூலதன ஒதுக்கத்தின் விபரம் தெரியப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(iv) நியமத்தின் 108 ஆம் பநதியின் பிரகாரம், நிதிச் செயலாற்றல் கூற்றின் முகப்பில் அல்லது குறிப்புகளில் மொத்த வருமானத்தினதும் உப வகைப்படுத்தல் குறித்த நிறுவனத்தினது செயற்பாடுகளில் ஏற்றவாறு வகைப்படுத்தப்பட்டுச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமாயினும், மீளாய்வாண்டில் நோயாளரது சிகிச்சை தொடர்பாக வைத்தியசாலைக்குக் கிடைக்கப்பெற்ற ரூபா 2,100,844,980 வருமானம் வகைப்படுத்தப்பட்டுச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(v) நியமத்தின் 132 ஆம் பந்தியின் பிரகாரம், நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கையில், பயன்படுத்திய கணக்கீட்டு அடிப்படை தெரியப்படுத்தப்பட வேண்டுமாயினும், 2017 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நடைபெறும் மூலதன வேலையாகிய ரூபா 432,718,789 க்குரிய கணக்கீட்டு அடிப்படை தெரியப்படுத்தப்படவில்லை.

(vi) மீளாய்வாண்டினது நிதிக்கூற்றுக்களில் 2017 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான ரூபா 359,565,291 எஞ்சிய கையிருப்பு, கிரயம் அல்லது நிகர தேறத்தகு பெறுமதி ஆகிய இரண்டில் எது குறைந்ததோ அதன் அடிப்படையில் பெறுமதியிடப்பட்டிருந்தபோதும், அக்கையிருப்பு விடயங்கள் வெவ்வேறாகத் தெரியப்படுத்தப்படவில்லை.

**(ஆ) இலங்கை பொதுத் துறைக் கணக்கீட்டு நியமம் 7**

---

(i) நியமத்தின் 65 ஆம் பந்தியின் பிரகாரம், நடைமுறை அல்லாத சொத்துக்களின் பயன்படு ஆயுட் காலம் வருடாந்தம் மீளாய்வு செய்யப்படாமையால் ரூபா 1,968,854,481 கிரயமுடைய நிலையான சொத்துக்கள் முற்றாகத் தேய்மானமாகியிருந்தபோதிலும் தொடர்ந்து பயன்படுத்தப்பட்டவாறிருந்தன. அதற்கமைய ஏற்பட்ட மதிப்பிடப்பட்ட வழுவானது இலங்கை பொதுத் துறைக் கணக்கீட்டு நியமம் 3 க்கமைய மீளாய்வு செய்யப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(ii) நியமத்தின் 69 ஆம் பந்தியின் பிரகாரம், சொத்தொன்று பயன்படுத்தப்படுவதற்குத் தயாரான நிலையிலும் அது எதிர்பார்த்தவாறு செயற்படுத்தப்படக் கூடியவாறான நிலையை எய்திய பின்னருமே தேய்மானம் ஆரம்பிக்கப்பட வேண்டுமாயினும், அதற்கு முரணாக சொத்துக் கொள்வனவு செய்யப்பட்ட அல்லது சுவீகரிக்கப்பட்ட ஆண்டிலே தேய்மானம் மேற்கொள்ளப்படாமை கணக்கீட்டுக் கொள்கையாக அமைந்தது தெரிய வந்தது.

**2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

---

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2017 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான வைத்தியசாலைக் கட்டணக் கட்டுப்பாட்டுக் கணக்கில் (Hospital Charges Control Account) நிலவிய இனங்காணப்படாத வரவு மீதியாகிய ரூபா 16,271,838 எவ்வாறு ஏற்பட்டது என்பதை அறிந்து அதனை திருத்தஞ் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டாது வைத்தியசாலை விடுதிக் கட்டண வருமானக் கணக்கிற்கு (Accomodation Charges) மாற்றஞ் செய்யப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின்போது வைத்திய வழங்கற் பிரிவிலிருந்து நன்கொடையாகப் பெறப்பட்ட ரூபா 31,444,099 கிரயமுடைய மருந்துகளதும் மீளாய்வாண்டின்போதும் முன்னைய ஆண்டின்போதும் நன்கொடையாகப் பெறப்பட்ட 491 கூறுகளைச் சேர்ந்த உபகரணங்களதும் பெறுமதி கணக்கிலிடப்படவில்லை.

(இ) கணனி முறைமையில் நிலவும் குறைபாடுகள் காரணமாக, மருந்து மற்றும் சத்திர சிகிச்சைப் பொருட்கள், பொதியிலடைத்தற் பொருட்கள், நுகர் பொருட்கள், கதிர் இயக்கப் பொருட்கள், ஆய்வுகூடப் பொருட்கள், எழுதுகருவி வகைப் பொருட்கள், பொதுக் களஞ்சியப் பொருட்கள் ஆகியவற்றினது 9 கையிருப்புக் கணக்குகளில் 2017 சனவரி 01 இல் உள்ளவாறான ஆரம்ப மீதிக்குப் பதிலாக 2016 சனவரி 01 இல் உள்ளவாறான அக்கணக்கின் ஆரம்ப மீதி பதிவாகிய தவறு காரணமாக, அந்த இருப்புக் கணக்கில் ரூபா 51,606,864 அதிகமாக வரவு வைக்கப்பட்ட தவறை நிவர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாது அதற்குச் சமமான பெறுமதி ஒவ்வொரு கையிருப்புக் கணக்கிலிருந்தும் குறிப்பிட்ட கொள்வனவுக் கணக்குகளுக்கு மாற்றஞ் செய்யப்பட்டிருந்தது.

(ஈ) வைத்திய வழங்கற் பிரிவின் கடன் கொடுத்தோர் கணக்கின் பிரகாரம், அப்பிரிவு முன்னைய ஆண்டில் பெற்ற வைத்திய வழங்கல்கள் தொடர்பாகக் கொடுப்பனவு செய்ய வேண்டிய ரூபா 35,700,014 வைத்திய வழங்கல் கணக்கிலிருந்து நீக்கப்படாது நாட்குறிப்பின் மூலம் மீண்டும் வியாபாரக் கடன் கொடுத்தோர் கட்டுப்பாட்டுக் கணக்கில் வரவு வைக்கப்பட்டு வேறொரு கடன்கொடுத்தோர் கட்டுப்பாட்டுக் கணக்கில் (Creditors Control Account) செலவு வைக்கப்பட்டதன் காரணமாக கடன்கொடுத்தோரது மீதி அதேயளவு அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(உ) சத்திர சிகிச்சைகளுக்கான வைத்திய உபகரணங்களும் ஆய்வுகூடத்திற்கான தளபாடங்களும் கொள்வனவு செய்யப்படுவதற்காக மீளாய்வாண்டில் சொத்துக்களின் பெறுமதியில் ஒரு பகுதியான ரூபா 23,284,960 முற்பணமாக வழங்கப்பட்டு, அது முற்பணக் கணக்கில் வரவு வைக்கப்படுவதற்குப் பதிலாக குறித்த சொத்துக் கணக்குகளில் வரவு வைக்கப்பட்டிருந்தன.

(ஊ) மீளாய்வாண்டின்போது 2 நிலையான சொத்துக்களைக் கொள்வனவு செய்வதற்குச் செலவிடப்பட்ட ரூபா 165,183 குறித்த வைப்புக் கணக்குகளில் வரவு வைக்கப்படுவதற்குப் பதிலாக நானாவித செலவுக் கணக்கில் வரவு வைக்கப்பட்டிருந்தது.

(எ) மீளாய்வாண்டில் 10 சந்தர்ப்பங்களில் வைத்திய உபகரணங்களை வழங்கும் 7 பேருக்கு கொடுப்பனவை மேற்கொள்கையில் உடன்படிக்கைப் பிரகாரம் அறவிட்டிருந்த தாமதக் கட்டணமாகிய ரூபா 2,875,084 கணக்கிலிடப்படவில்லை.

(ஏ) மீளாய்வாண்டின்போது 16 வைத்தியசாலைப் பிரிவுகளால் அப்புறப்படுத்தப்பட்ட வைத்திய உபகரணங்கள், மின் விசிறிகள், மின் உற்பத்தி இயந்திரங்கள், கட்டிடப் பொருட்கள், தளபாடங்களும் உபகரணங்களும், சக்கர நாற்காலிகள், ஏனைய உபகரணங்கள் என்பன ரூபா 4,391,608 க்கு விற்பனையாகியபோதும், அச்சொத்துக்களது கிரயம் மற்றும் திரண்ட தேய்மானம் என்பன இனங்காணப்பட்டுக் குறித்த கணக்குகளிலிருந்து நீக்கப்படுவற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை.

(ஐ) நிதிக்கூற்றுக்களில் ஏனைய கட்டிடங்கள் (Other buildings) என இனங்காணப்பட்டிருந்த ஆண் தாதியர் விடுதி அமைந்துள்ள கட்டிடங்களது தேய்மானம் 5 சதவீதமாயினும், அதன் தேய்மானம் 2 சதவீதம் மாத்திரமே ஆகியமையால் மீளாய்வாண்டில் தேய்மானம் ரூபா 283,746 குறைவாகக் கணக்கிலிடப்பட்டிருந்தது.

(ஒ) நிரந்தர நியமனமற்ற 50 ஆண் தாதி மாணாக்கரது சம்பளத்தில் கழித்துக் கொள்ளப்பட்ட ரூபா 183,144 ஊழியர் சேமலாப நிதியத் தொகை அவர்களுக்கு மீண்டும் வழங்கப்பட்டிருந்தபோதும், சம்பளக் கணக்கில் வரவு வைப்பதற்குப் பதிலாக சம்பள முற்பணக் கணக்கில் வரவு வைக்கப்பட்டிருந்தது.

(ஓ) முன்னைய ஆண்டில் கட்டிடங்கள் மற்றும் தளபாடங்கள், உபகரணங்களது தேய்மானம் ரூபா 93,756 குறைவாகக் கணக்கிலிடப்பட்ட தவறானது நடப்பாண்டில் திருத்தஞ் செய்யப்பட்டிருந்தது. எனினும், மூலதன மானியக் கணக்கு அதேயளவு தொகையால் காலக் கழிவுக்குள்ளாகவில்லை.

(ஔ) 2017 டிசெம்பர் 31 ஆந் திகதியளவில் அறவீடு முடிவடைந்த இரு ஊழியர்களது இடர்க்கடன் மீதிகளது கூட்டுத் தொகை ரூபா 211,022 ஆகும். இது அத்திகதியளவில் அறவிடப்பட வேண்டிய கடனாகக் காட்டப்பட்டிருந்தது. அறிவீடு முடிவடையாத ஏனைய இரு ஊழியர்களது கடன் மீதிக் கூட்டுத் தொகையாகிய ரூபா 245,396 அத்தினத்தில் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய கடனாகக் கணக்கில் காட்டப்பட்டிருக்கவில்லை.

(க) வாடகைக்கு வழங்கப்பட்டிருந்த வைத்தியசாலை வளவின் ஒரு பகுதி தொடர்பாக 2017 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டியிருந்த மின் கட்டணமாகிய ரூபா 81,848, அத்தினததில் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய விற்பனைத் தரகான ரூபா 146,041 மற்றும் அத்தினத்தில் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய ஏனைய 9 வருமான விடயங்களின் பொருட்டு அறவிடப்பட வேண்டிய ரூபா 628,460 என்பன கணக்கிலிடப்படவில்லை.

(ங) 2014 ஆம் ஆண்டிலும் அதற்கு முன்னைய ஆண்டுகளிலும் ஓய்வுபெற்ற மற்றும் சேவை நீங்கிய மூன்று ஊழியர்களின் பொருட்டு மீளாய்வாண்டில் ரூபா 1,004,992 பணிக்கொடைக்கான நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது. வேலை நீங்கிய ஏனைய 3 ஊழியர்களுக்கு 2015 ஆம் ஆண்டில் பணிக்கொடையாக ரூபா 599,247 வழங்கப்பட்டிருந்தபோதும், அத்தொகை தொடர்ந்தும் கொடுப்பனவு செய்ய வேண்டிய தொகையாகக் காட்டப்பட்டிருந்தது.

(ச) ஊழியர் ஒருவருக்குப் பணிக்கொடைக் கொடுப்பனவை வழங்குகையில் அறவிடப்பட்ட இடர்க் கடனாகிய ரூபா 96,069 கணக்கிலிடப்படவில்லை.

(ஞ) வைத்தியசாலைக் கட்டணக் கடன்பட்டோராகிய காப்புறுதி நிறுவனம் மற்றும் பிற நிறுவனங்கள் வழங்கும் கடனுக்கான கடிதங்களில் (Credit Letters) உள்ளடங்கிய தொழில்சார் கட்டணமும் வைத்தியசாலைக் கட்டணமும் சரிவர இனங்காணப்பட்டுக் கணக்கிலிடப்படாது ரூபா 9,163,244 வைததியசாலைக் கட்டணக் கட்டுப்பாட்டுக் கணக்கில் வரவு வைக்கப்பட்டு தொழில்சார் கட்டணக் கொடுப்பனவுக் கணக்கில் செலவு வைக்கப்பட்டிருந்தது.

(ட) 2017 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு மேற்கொள்ளப்பட்ட கையிருப்பை நேரடி சரி பிழை பார்த்தல் அறிக்கையின் பிரகாரம், காலாவதியாகிய ரூபா 6,520,276 கிரயமுடைய 17,472 கூறுகளது கையிருப்பை இலாபத்துக்கு எதிரே பதிவழிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை. கையிருப்புக் கணக்கிற்கெனப் பயன்படுத்தப்படும் கணனி மென் அணியின் பிரகாரம் அத்தினத்தில் காலாவதியாகியிருந்த 43,385 கூறுகளின் கிரயம் ரூபா 3,848,630 ஆகும். ஆகவே, ரூபா 2,671,646 வேறுபாட்டிற்கான காரணம் இனங்காணப்பட்டிருக்கவில்லை.

### 2.2.3 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் பின்வரும் விடயங்களுக்கான பெறுமதிக்கும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கோவைகள் மற்றும் பதிவேடுகள் என்பவற்றினது பெறுமதிகளுக்குமிடையே ரூபா 261,789,518 கூட்டுத் தொகையுடைய வித்தியாசம் நிலவியபோதும், வேறுபாட்டிற்கான காரணத்திற்கு விளக்கமளிக்கப்படவில்லை.

| விபரம் | | கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்கு / கோவை/ பதிவேடு | நிதிக்கூற்றின் படி பெறுமதி | கணக்கு / கோவை/ பதிவேட்டின் படி பெறுமதி | வேறுபாடு |
|---|---|---|---|---|---|
| | | | ரூபா. | ரூபா. | ரூபா. |
| (i) | 2017 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான வைத்தியசாலைக் கட்டண கடன்பட்டோர் | தனிப்பட்ட கடன்கொடுத்தோரது மீதி நிரல் | 132,325,102 | 134,958,121 | 2,633,019 |
| (ii) | 2017 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான வர்த்தகக் கடன்கொடுத்தோர் | தனிப்பட்ட கடன்கொடுத்தோரது மீதி நிரல் | 477,920,039 | 516,627,485 | 38,707,446 |
| (iii) | 2017 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான கையிருப்பு மீதி | கையிருப்பு நேரடி சரி, பிழை பார்த்தல் அறிக்கை | 364,603,053 | 365,687.748 | 1,084,695 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (iv) | 2017 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான செயலாற்றல் பிணைவைப்பு | பட்டோலை | 1,463,230 | 1,685,195 | 221,965 |
| (v) | மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்த மற்றும் சுவீகரித்த நிலையான சொத்துக்களது கிரயம் | (i).கணனி அச்சிடற் பிரதியின் உப பட்டோலை | 762,668,493 | 657,759,711 | 104,908,782 |
| | | (ii). பொருட் பெறுவனவுக் குறிப்பு விபரத்தை உள்ளடக்கிய பட்டோலை | 762,668,493 | 648,847,810 | 113,820,683 |
| (vi) | 2017 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான விழா முற்பணம் | விரிவான விழா முற்பண அறிக்கை | 488,455 | 302,500 | 185,955 |
| (vii) | அம்புலன்சுக் கட்டண வருமானம் | வருமான வகைப்படுத்தல் அறிக்கை, தனியார் அம்புலன்சை ஏற்பாடு செய்வது தொடர்பான பதிவேடு மற்றும் தனிப்பட்ட சுற்றுலாப் பதிவேடு | 2,998,989 | 2,772,016 | 226,973 |

**2.2.4 கணக்காய்விற்கான சான்றின்மை**

கீழே குறிப்பிடப்பட்ட விடயங்களுக்கெதிரே சுட்டிக்காட்டப்பட்டுள்ள சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் அவற்றைத் திருப்திகரமாக ஏற்றுக்கொள்ளவோ அல்லது சான்றுறுதிப்படுத்தவோ முடியவில்லை.

| விடயம் | | பெறுமதி | சமர்ப்பிக்கப்படாத சான்று |
|---|---|---|---|
| | | ரூபா | |
| (அ) | நானாவித வைப்புகள் | 4,189,582 | இருபது ஆண்டுகளுக்கு மேற்பட்ட நானாவித வைப்புகளது மீதிகள் சரியானவையா என்பதை உறுதி செய்வதற்கான பதிவேடுகள் |
| (ஆ) | சேவைக் கட்டணம் | 511,644 | தொழில்சார் கட்டணத்தில் 0.15 சதவீதத்தை மாத்திரம் வைத்தியசாலைச் சேவைக் கட்டணமாக அறவிடுவதற்கான பணிப்பாளர் சபை அங்கீகாரம் |
| (இ) | 2017 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான கடன்பட்டோரும் கடன் கொடுத்தோரும் | 128,187,169<br>477,920,038 | நிலுவையாக உள்ள கால வரம்பைச் சரிவர வெளிப்படுத்தும் விதத்தில் தயாரிக்கப்பட்ட கடன்பட்டோர், கடன் கொடுத்தோர் காலப் பகுப்பாய்வு |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | தொழில்சார் கட்டண அறவீடும் கொடுப்பனவும் | 356,017,257<br>289,538,096 | தொழில்சார் கட்டண அறவீடு மற்றும் கொடுப்பனவு Datamation மென் அணி முறைமையின் மூலம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. எனினும், அறவிடப்பட வேண்டிய தொழில்சார் கட்டணம், கொடுப்பனவு செய்ய வேண்டிய தொழில்சார் கட்டணம், கொடுப்பனவு செய்யப்பட்ட தொழில்சார் கட்டணம் என்பவற்றின் விபரம் |
| (உ) | வைத்தியசாலைக் கட்டண வருவாயில் உள்ள தவறுகளைத் திருத்தஞ் செய்தல் | 1,010,158,314<br>1,957,650,245 | தவறைத் திருத்துவதற்கான இரு கொடுக்கல் வாங்கல்களுக்குரிய முறையான அனுமதியுடனான நாட் குறிப்புகள் |

## 2.3 பெற வேண்டிய மற்றும் கொடுப்பனவு செய்ய வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2017 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு 5 ஆண்டுகளுக்கு மேற்பட்ட பழமை வாய்ந்த 15 நானாவித கடன் கொடுத்தோரது தொகையாகிய ரூபா 4,572,784, ரூபா 800,907 பெறுமதியான ஏழு செயலாற்றல் பிணை முறி வைப்புகள், கொடுப்பனவு செய்ய வேண்டிய தொழில்சார் கட்டணமாகிய ரூபா 3,616,142 என்பவற்றைத் தீர்த்து வைப்பதற்கு அல்லது வருமானமாக இனங்கண்டு அவற்றைக் கணக்கிலிடுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை.

(ஆ) இலங்கை இராணுவம் மற்றும் இலங்கை வான் படை ஆகியவற்றிலிருந்து 2009 ஆம் ஆண்டுக்கு முன்பிருந்தே அறவிடப்பட வேண்டியுள்ள வைத்தியசாலைக் கட்டணமாகிய முறையே ரூபா 2,438,514 மற்றும் ரூபா 1,698,819 என்பவற்றை அறவிடுவதற்கு அல்லது முறையான அனுமதியுடன் கணக்குகளிலிருந்து அவற்றைப் பதிவழிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(இ) 2013, 2016 ஆம் ஆண்டுகளில் பயிற்சி பெறும் வைத்தியர்களுக்கு கொடுப்பனவு செய்யப்பட்ட சம்பளமாகிய முறையே ரூபா 1,112,280 மற்றும் ரூபா 3,312,066 என்பவற்றை சுகாதார, போசனை மற்றும் சுதேசிய வைத்தியசாலை அமைச்சின் மூலம் மீள் நிரப்புவதற்கு 2018 யூன் 30 ஆந் திகதியளவிலும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(ஈ) வைத்திய உத்தியோகத்தர் ஒருவருக்கு 2015 ஆம் ஆண்டின்போது வழங்கப்பட்ட சம்பள முற்பணமாகிய ரூபா 87,000 மீளாய்வாண்டு இறுதியிலேனும் தீர்த்து வைக்கப்படாதிருந்தது.

## 2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் பின்வருமாறு.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | | இணங்காமை |
|---|---|---|
| (அ) | 1987 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க பொது ஒப்பந்த உடன்படிக்கை அதிகாரச்சட்டம் | அதிகாரச் சட்டத்தின் பிரகாரம், ரூபா 5 மில்லியனுக்கு மேற்பட்ட ஒப்பந்தங்களில் ஈடுபடும் ஒப்பந்தகாரரும் அந்த ஒப்பந்தமும் பொது ஒப்பந்தப் பதிவாளரிடம் பதிவு செய்து கொள்ளப்பட வேண்டும். எவ்வாறாயினும், ரூபா 175,827,708 மொத்தக் கிரயமுடைய 3 ஒப்பந்தங்கள் மற்றும் ரூபா 58,562,300 மொத்தக் கிரயத்துடனான வைத்திய உபகரணக் கொள்வனவு தொடர்பான ஒப்பந்தங்கள் வழங்கப்பட்ட ஒப்பந்தகாரர்களும் அவ்வொப்பந்தங்களும் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணங்கள் | |
| | (i) நிதிப்பிரமாணங்கள் 103(1)(ஆ) மற்றும் 104(1)(அ) | 2016, 2017 ஆம் ஆண்டுகளில் ஏற்பட்ட 8 வாகன விபத்துக்கள் சம்பந்தமாக ஆரம்ப பரிசீலனைகளை மேற்கொண்டு பொறுப்பானவர்கள் உறுதி செய்யப்படவில்லை. |
| | (ii) நிதிப்பிரமாணங்கள் 389(அ) மற்றும் (ஆ) | பெறுபவர்களது அடையாளம் சரிவர உறுதி செய்யப்பட்டுக் காசோலைகள் ஒப்படைக்கப்பட வேண்டுமாயினும், 58 வைத்தியர்களுக்கு 2017 சனவரியில் தொழில்சார் கட்டணமாக வழங்கப்பட்ட ரூபா 10,074,565 க்கான காசோலைகள் அவர்களது அடையாளத்தை உறுதி செய்யாது ஒப்படைக்கப்பட்டிருந்தன. |
| | (iii) நிதிப்பிரமாணம் 756(1) | ஒவ்வொரு பிரிவிலும் மற்றும் கிளைகளிலும் உள்ள பொருட்களைச் சரி, பிழை பார்ப்பதற்கும் பயன்படுத்த முடியாத பொருட்களை அறிக்கையிடுவதற்கும் ஒவ்வொரு ஆண்டின் டிசெம்பர் 15 ஆந் திகதிக்கு முன்னர் அல்லது அதற்கு அண்மித்த திகதியில் பொருட் கணிப்புச் சபை நியமிக்கப்பட்டு பொருட் கணிப்பு நடைபெற வேண்டுமாயினும், 2017 ஆம் ஆண்டுக்கான பொருட் கணிப்பு நடவடிக்கைகள் 2018 யூலை 31 ஆந் திகதியளவிலும் நடைபெறவில்லை. |
| (இ) | 2007 மார்ச் 09 ஆந் திகதிய 133(1) ஆம் இலக்க வரவு, செலவுத் திட்டச் சுற்றறிக்கை மற்றும் 2008 டிசெம்பர் 31 ஆந் திகதிய 30/2008 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கை | சுற்றறிக்கையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம், ஊழியர் ஒருவருக்கு வழங்கப்படக்கூடிய அதி கூடிய இடர்க் கடன் வரம்பு ரூபா 250,000 ஆகும். எவ்வாறாயினும், 2017 சனவரி முதல் 2017 செப்டெம்பர் 30 இல் முடிவடைந்த 09 மாத காலத்தின்போது 106 ஊழியர்களுக்கு ரூபா 258,114 முதல் ரூபா 399,346 வரை இடர்க் கடன் வழங்கப்பட்டிருந்ததுடன், அதி கூடிய இடர்க் கடன் வரம்பை அதிகரித்த மொத்தத் தொகை ரூபா 6,758,503 ஆகும். |

| | | |
|---|---|---|
| (ஈ) | 2015 மே 25 ஆந் திகதிய பீஈடீ1/2015 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | உத்தியோகபூர்வ வாகனம் ஒதுக்கப்பட்ட அல்லது எரிபொருள் படியுடன் போக்குவரத்துப் படியையும் பெறும் உத்தியோகத்தர்கள் வாகனக் குழாமில் உள்ள வாகனங்களைப் பயன்படுத்துதல் ஆகாது. எனினும், 6 வைத்தியசாலை உத்தியோகத்தர்கள் 2,191 கிலோ மீட்டர் பயணஞ் செய்வதற்கு 6 வாகனங்களைப் பயன்படுத்தியிருந்தனர். |
| (உ) | 1978 டிசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை. | குறித்த சுற்றறிக்கைக்கு ஏற்ப நிலையான சொத்துப் பதிவேடு ஒன்று தயாரிக்கப்படவில்லை. |

## 3. நிதிசார் மீளாய்வு

### 3.1 நிதிப் பெறுபேறுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டினது டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான வைத்தியசாலைச் சபையின் பற்றாக்குறை ரூபா 149,619,386 ஆகும். இதனோடொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 175,818,975 ஆகும். இதனால், முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டினது நிதிப் பெறுபேறு ரூபா 26,199,589 அதிகரித்திருந்தது. முன்னயை ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டில் வைத்தியசாலையினது செயற்பாட்டுச் செலவினம் ரூபா 306,785,959 அதிகரித்தபோதும், ஆண்டிற்கான வருமானமும் ரூபா 340,926,448 அதிகரித்தமையே இவ்வதிகரிப்புக்கான பிரதான காரணமாகும்.

மீளாய்வாண்டினதும் முன்னைய 4 ஆண்டுகளினதும் நிதிப் பெறுபேறுகளைப் பகுப்பாய்வு செய்கையில் 2013, 2014 ஆம் ஆண்டுகளில் முறையே ரூபா 92,286,361 மற்றும் ரூபா 720,613,254 மிகை ஏற்பட்டிருந்ததுடன், 2015 தொடக்கம் 2017 வரை முறையே ரூபா 352,618,182, ரூபா 175,818,975, ரூபா 149,619,386 என பற்றாக்குறையே ஏற்பட்டிருந்தது. எவ்வாறாயினும், நிதிப் பெறுபேற்றில் ஊழியர்களது ஊதியம், அரசாங்க வரி, நடைமுறை அல்லாத சொத்துக்களுக்கான தேய்மானம் என்பவற்றை மீண்டும் சீராக்கல் செய்ததன் பின்னர் 2013 ஆம் ஆண்டில் ரூபா 1,026,310,304 ஆகவிருந்த பங்களிப்பு மாற்றமடைந்து மீளாய்வாண்டளவில் ரூபா 1,477,876,821 வரை அதிகரித்திருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

#### 4.1.1 திட்டமிடல்

மீளாய்வாண்டிற்கெனத் தயாரிக்கப்பட்ட செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம், கொடுப்பனவு மேற்கொள்ளப்படும் வார்ட் தொகுதி (Paying Ward Complex), ஆண் தாதியர் விடுதிகள் (Male Nurses Quarters), வேலைத் தளம் (Workshop) கட்டிடம் என்பவற்றை நிர்மாணிப்பதற்கு முறையே ரூபா 1,300 மில்லியன், ரூபா 68 மில்லியன், ரூபா 85 மில்லியன் என ஒதுக்கப்பட்டிருந்தபோதும், பிரதான பொருட் கொள்வனவுத் திட்டத்தில் இந் நடவடிக்கைகளுக்கு ஒதுக்கப்பட்டிருந்த தொகை முறையே ரூபா 750 மில்லியன், ரூபா 75 மில்லியன், ரூபா 105 மில்லியன் என்பன மாத்திரமே.

### 4.1.2 செயற்பாடுகளும் மீளாய்வும்

-----------------------------------------------

மீளாய்வாண்டிற்கெனத் தயாரிக்கப்பட்ட செயல் நடவடிக்கைத் திட்டம் மற்றும் பௌதீக, நிதிசார் முன்னேற்ற அறிக்கையைப் பரிசீலிக்கையில் ரூபா 700 மில்லியன் கூட்டுத் தொகை மதிப்பீட்டுடனான 3 செயற்திட்டங்களது பொருட் கொள்வனவு நடவடிக்கைகளில் தாமதம் மற்றும் ரூபா 153 மில்லியன் கூட்டுத் தொகையுடைய 2 செயற்திட்டங்களது ஒப்பந்த நடவடிக்கைகளில் நிலவிய நலிவுகள் போன்ற காரணங்களால் குறித்த உடன்படிக்கைப் பிரகாரமான நிர்மாண வேலைகளில் 1 முதல் 10 மாதகால தாமதம் ஏற்பட்டிருந்தது.

### 4.2 முகாமைத்துவச் செயற்பாடுகள்

------------------------------------------------------

2017 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான வைத்தியசாலைக் கட்டணம் (Hospital charges) வருமானம் ரூபா 2,100,844,980 ஆகும். எனினும், மருந்துகளதும் சத்திர சிகிச்சைப் பொருட்களது கட்டணமும் தவிர, ஏனைய கட்டணங்களைத் தீர்மானிப்பதற்கு விலை நிர்ணயக் குழு ஒன்று நியமிக்கப்பட்டிராததுடன், ஏனைய கட்டணங்களதைத் தீர்மானிக்கும் விதம் மற்றும் அடிப்படை என்பன மென் அணி முறைமையில் உள்ளடக்கப்பட்டிருக்கவுமில்லை. அவ்வாறே, சத்திர சிகிச்சை, பல்வேறு வகைப் பரிசோதனைகள் மற்றும் ஏனைய சேவைகள் என்பவற்றிற்கான வைத்தியசாலைக் கட்டணம் அவ்வவ்போது மீளாய்வு செய்யப்பட்டிருந்தபோதும், அவற்றிற்கு முறையான அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

### 4.3 செயற்பாட்டு நடவடிக்கைகள்

-----------------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) வைத்தியசாலைக்கு உலர் உணவுப் பொருட்களை வழங்குதல் மற்றும் நோயாளருக்கும் சிற்றூழியர்களுக்கும் உணவு வழங்குதல் சம்பந்தமாக வெளியிடப்பட்ட 2005 மே 28 ஆந் திகதிய 01-21/2015 ஆம் இலக்க சுகாதார, போசனை, தேசிய வைத்திய அமைச்சின் பொது சுற்றறிக்கைக்கு அனுசரணையாக இவ்வேலைத் திட்டங்களுக்கான தகுந்த முறையான அனுசரணையாக இவ்வைத்தியசாலைக்கான தகுந்த விதிமுறைகளும் நடைமுறைகளும் உள்ளடக்கப்பட்ட அறிவுறுத்தல் கோவை ஒன்று தயாரிக்கப்பட்டு பணிப்பாளர் சபையினது அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. உலர் உணவுப் பொருட்களை வழங்குவது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) வாரத்திற்கான உணவு நிகழ்ச்சித் திட்டத்தைத் தயாரிப்பதற்கு நிறுவனத் தலைவர் உணவு முகாமைத்துவக் குழுவின் உதவியைப் பெறுவற்கும் தயாரிக்கப்பட்ட வார உணவு நிகழ்ச்சித் திட்டத்தைக் குறித்த பிரிவில் ஒப்படைப்பதற்கும் அதன் பிரகாரம் உலர் உணவை வழங்குவதற்குமான மாதாந்தத் தேவையைத் தயார்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை.

(ii) ஒவ்வொரு வார்ட்டிலுமுள்ள வைத்திய உத்தியோகத்தர்கள் சகல நோயாளர்களுக்கும் தகுதியான உணவு அட்டவணையைத் தயாரித்து அதனைக் குறிப்பிடவும், நோயாளர்களுக்கான மேலதிக உணவுத் தேவைகளைக் கட்டிலில் தொங்கும் அட்டவணைக் குறிப்பில் குறிப்பிட்டு தனிப்பட்ட ரீதியில் அவற்றைச் சான்றுறுதிப்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(iii) வைத்தியசாலையில் தங்கியிருக்கும் நோயாளிகளின் பொருட்டு ஒவ்வொரு மாத முதல் திகதியன்றும் புதிய உணவுச் சுற்றுக்களைத் தயாரித்தல், ஒவ்வொரு நோயாளியினதும் உணவு அட்டவணைப் பொழிப்பைத் தயாரித்து நாளொன்றிற்குத் தேவையான உணவுச் சுற்றுக்களது எண்ணிக்கையை கணிப்பிடுதல் மற்றும் அத்தினத்தில் உள்ளவாறான நோயாளர்களின் எண்ணிக்கையுடன் அதனை ஒப்பிட்டுப் பார்த்தல், மேலதிக உணவுக் (Extras) குறிப்புத் தாள்களை நாளாந்தம் சேகரித்தல் மற்றும் அவ்வுணவு தொடர்பான பொழிப்பை மாதிரிப் படிவத்தில் குறிப்பிட்ட வரிகளின் கீழ் குறித்துக் கொள்வதன் மூலம் நாளாந்தம் அவற்றை இணக்கம் செய்தல் என்பன நடைபெறவில்லை.

(iv) சமைத்த உணவு எஞ்சி அதன் காரணமாக அது விரயமாவது தொடர்பாக பரிசீலித்து அதற்கமைய உலர் உணவை ஓரளவு சதவீதத்தால் குறைத்துப் பெறுவதை உறுதி செய்யும் பதிவேடு பேணப்படவில்லை.

(v) எதிர்பாராத சந்தர்ப்பத்தில் திடீர் பரிசோதனைகளை மேற்கொள்ளல் மற்றும் அவதானிக்கப்படும் குறைபாடுகள் சம்பந்தமாக நடவடிக்கை எடுத்தல் போன்றன கோவைப்படுத்தப்படும் பதிவேடும் தகவல்களும் இருக்கவில்லை.

(vi) சமைத்த உணவை விநியோகிப்பதற்கு முன்பு அதன் மாதிரி காட்டப்பட்டதையும் வைத்தியசாலை ஊழியர்கள் தமது அட்டைகளைச் சமர்ப்பித்து உணவைப் பெற்றமை பரிசோதிக்கப்பட்டதையும் குறித்த அளவிலான உணவு ஊழியர்களுக்கு வழங்கப்பட்டதையும் உறுதி செய்யும் பதிவேடு பேணப்படவில்லை.

(vii) குறைந்த கிரயத்தில் உலர் உணவுப் பொருட்களைப் பெறுவதற்கான கட்டளையைச் சமர்ப்பித்தல், அவற்றைப் பெறுதல், சமைத்தல் மற்றும் விநியோகித்தல் தொடர்பான உணவு முகாமைத்துவக் குழு ஒன்று சுழற்சி ரீதியில் இயங்கவில்லை.

(viii) உணவுப் பொருட்களுக்கான கட்டளையை வழங்குதல், கணக்கிலிடுதல், பதிவு செய்தல், நிர்வகித்தல் என்பவற்றிற்குப் பொருத்தமான மாதிரிப் படிவம் அறிமுகம் செய்து வைக்கப்படவில்லை.

(ஆ) 2016 நவம்பர் 30 ஆந் திகதி ரூபா 23,544,099 செலவில் கொள்வனவு செய்யப்பட்ட சிகிச்சைக் கூட கழிவுகளை எரியூட்டும் இயந்திரம் (Incinerator) மாதாந்தம் ரூபா 900,000 வீதப்படி எதிர்வரும் 3 ஆண்டுகளுக்கு 2017 ஆகஸ்ட் 01 தொடக்கம் வெளி நிறுவனம் ஒன்றிற்கு வாடகைக்கு வழங்கப்பட்டிருந்தது. இது தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் பின்வருமாறு.

(i) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 774 ஆம் நிதிப் பிரமாணத்தில் குறிப்பிட்டவாறு கேள்வி நடைமுறை கடைப்பிடிக்கப்படாது இயந்திரத்தை வாடகைக்கு வழங்கிய நிறுவனம் தெரிவு செய்யப்பட்டிருந்தது.

(ii) 2017 யூலை 28 ஆந் திகதிய உடன்படிக்கையின் பிரகாரம், இயந்திரத்தை வாடகைக்கு பெற்ற நிறுவனம் மாதாந்தம் வைத்தியசாலைக்குச் செலுத்த வேண்டிய வாடகை ரூபா 900,000 ஆகும். எவ்வாறாயினும், 2017 ஆகஸ்ட் 01 முதல் 2018 யூன் 30 ஆந் திகதியளவிலும் அறவீடு எதுவும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(iii) இயந்திரத்தை ஒப்பந்தகாரரிடம் ஒப்படைக்கும் சந்தர்ப்பத்தில் இயந்திரத்தில் இருந்த 3,644 லீட்டர் மண்ணெண்ணையின் கிரயமாகிய ரூபா 174,902 ஒப்பந்தகாரரிடமிருந்து அறவிடப்பட்டிருக்கவில்லை.

(iv) வைத்தியசாலை நாளாந்தம் வெளியேற்றும் இரசாயனக் கழிவுகள் 250 கிலோ கிராம் முதல் 300 கிலோ கிராம் வரையிலானவை மாத்திரமேயாயினும், அது தொடர்பாக முறையான ஆய்வு மேற்கொள்ளாது நாளாந்தம் ஏறக்குறைய 1,200 கிலோ கிராம் செயலாற்றக் கூடிய இயந்திரம் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. 2016 டிசெம்பர் 01 முதல் 2017 டிசெம்பர் 31 வரையான 13 மாத காலத்தின்போது எரியூட்டப்பட்ட கழிவுகள் 184,187 கிலோகிராம் மாத்திரமே ஆகையால் இயந்திரத்தின் முழு இயலளவில் 39 சதவீதம் மாத்திரமே பயன்படுத்தப்பட்டிருந்தது. ஏனைய தனியார் வைத்தியசாலைகள் மற்றும் சுகாதார நிறுவனங்களது இரசாயனக் கழிவுகளைப் பெற்று அவற்றை எரியூட்டும் எதிர்பார்ப்புடன் இயந்திரம் வாடகைக்கு வழங்கப்பட்டிருந்தபோதும், எதிர்பார்த்த நோக்கம் நிறைவேறவில்லை.

## 4.4 பதவியணி நிர்வாகம்

-------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) வைத்தியசாலையின் நிரந்தரப் பதவியணியில் உள்ள பதவிகளுக்கு ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல், தரப்படுத்தல் போன்ற முறையான ஆட்சேர்ப்பு மற்றும் பதவியுயர்வு நடைமுறைகளைத் தயாரித்து அதனை அங்கீகரித்துக் கொள்வதற்கு 2017 டிசெம்பர் 31 ஆந் திகதியளவிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2015 மே 22 ஆந் திகதிய பணிப்பாளர் சபையினது அங்கீகாரத்தின் பிரகாரம், தகவல் தொழில்நுட்ப மதியுரையாளர் (IT Consultant) ஒருவர் பணிப்பொறுப்பு ஒப்படைப்பு அடிப்படையில் (Assignment Basis) 2015 யூன் 08 தொடக்கம் ஆட்சேர்க்கப்பட்டு மாதாந்தம் ரூபா 120,000 வீதம் 2017 டிசெம்பர் 31 வரையான காலப்பகுதியின்போது மொத்தப் படியாக ரூபா 3,720,000 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. இது தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் பின்வருமாறு.

(i) குறித்த நியமனக் கடிதத்தின் பிரகாரம், வாரத்தில் 3 நாட்கள் 2 முதல் 4 மணித்தியாலங்கள் இவ்வுத்தியோகத்தர் வைத்தியசாலையில் கடமையாற்ற வேண்டியிருந்தபோதும், சேவையில் ஈடுபட்டமை மற்றும் எதிர்பார்த்த சேவை நிறைவேறியமை தொடர்பாக மேற்பார்வை உத்தியோகத்தரால் உறுதி செய்யப்பட்டதன் பின்னரே மாதாந்தப் படி வழங்கப்பட வேண்டும். எனினும், சேவைக்குச் சமூகமளித்தமை தொடர்பாக எழுத்து மூலச் சான்று உறுதிப்படுத்தப்படாதும் சேவை நிறைவேறியமை உறுதி செய்யப்படாமலும் படி வழங்கப்பட்டிருந்தது.

(ii) நியமனக் கடிததத்தின் பிரகாரம், தற்போதுள்ள தகவல் தொழில்நுட்ப முறைமையில் உள்ள குறைபாடுகளை நிவர்த்தி செய்து அவற்றைச் சீராக்குவதற்கும் கணக்கீடு மற்றும் வைத்தியசாலைக் கட்டணப் பட்டியலைத் தயாரித்தல் (Systolic and Accpac) தொடர்பான கணனி மென் அணியை வெற்றிகரமாக அமுலாக்குவதற்கு உதவியளித்தல், அதன்போது இனங்காணப்படும் குறைபாடுகள் மற்றும் பிரச்சினைகள் தொடர்பான தீர்வு என்பன தொடர்பான அறிக்கைகளை முகாமைத்துவத்தின் தேவைக்கேற்ப மாதாந்தம் வழங்க வேண்டியதுடன், அவ்வாறான அறிக்கைகள் எதுவும் சமர்ப்பிக்கப்பட்டமை புலனாகாதிருந்தது.

(iii) ஆரம்பத்தில் 6 மாதங்களுக்கான நியமனமே வழங்கப்பட்டிருந்தபோதும், பின்னர் 6 மாதங்களுக்கொரு முறை சேவைக்காலம் நீடிக்கப்பட்டிருந்தபோதும், கணக்கீடு மற்றும் விலைப்பட்டியல் தயாரிப்பு தொடர்பான கணனி முறைமைக் குறைபாடுகள் இனங்காணப்பட்டும் பிரச்சினைகளுக்கான தீர்வு சமர்ப்பிக்கப்பட்டும் இருந்தமை கணக்காய்வில் உறுதி செய்யப்படவில்லை.

## 5. நிலைத்து நிற்கவல்ல அபிவிருத்தி

### 5.1 நிலைத்து நிற்கவல்ல நோக்கத்தை எய்துதல்

2017 ஆகஸ்ட் 14 ஆந் திகதிய என்பீ/எஸ்பீ/எஸ்டீஜீ/17 ஆம் இலக்க தேசிய கொள்கை மற்றும் பொருளாதார நடவடிக்கைகள் அமைச்சின் செயலாளரால் வெளியிடப்பட்ட சுற்றறிக்கை மற்றும் நிலைத்து நிற்கவல்ல அபிவிருத்தி தொடர்பான ஐக்கிய நாடுகளின் ‘‘2030 நிகழ்ச்சி நிரல்’’ தொடர்பாக வைத்தியசாலைச் சபை அறிந்திராமையால் தமது பரப்பெல்லைக்குள் வரும் பணிகள் தொடர்பான நிலைத்து நிற்கவல்ல அபிவிருத்தி நோக்கங்கள், இலக்கு மற்றும் அந்த இலக்கை எய்தக்கூடிய வழிவகைகளையும் இலக்கை எய்துவதையும் அளவிடுவதற்கான சுட்டுகளை இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## 6. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 6.1 பொருட் கொள்வனவும் ஒப்பந்தச் செய்றபாடுகளும்

#### 6.1.1 பொருட் கொள்வனவு

(அ) ஒப்பந்தப் பெறுமதியான ரூபா 53,833,744 உடனான 05 படுக்கை மின்தூக்கிகளை (Bed Lift) கொள்வனவு செய்வதற்கான ஒப்பந்தம் முன்னைய ஆண்டில் தனியார் கம்பனி ஒன்றிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. ஒப்பந்தத் தொகையின் 83 சதவீதமான ரூபா 44,618,959 கொடுப்பனவு செய்யப்பட்ட திகதி 2017 பெப்ரவரி 17 ஆகும். இது தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் பின்வருமாறு.

(i) செயற்பட்டவாறிருந்த 05 பழைய மின்தூக்கிகள் குறைபாடுகள் உள்ளவையாகக் கருத்துத் தெரிவிக்கப்பட்டு அவை கழற்றி அகற்றப்பட்டிருந்தன. எனினும், அவ்வாறு கழற்றி அகற்றுவதற்கு 770 ஆம் நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நியமிக்கப்பட்ட தொழில்நுட்ப உத்தியோகத்தரையும் உள்ளடக்கிய கணிப்புச் சபையினது சிபாரிசு பெறப்பட்டிருக்கவில்லை.

(ii) புதிய மின்தூக்கியைக் கொள்வனவு செய்வதற்குரிய அரசாங்க பொருட் கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 6.3.6 ஆம் வழிகாட்டியின் பிரகாரம், குறித்த மாதிரிப் படிவத்தில் கேள்விகளைத் திறக்கும் நடவடிக்கைகள் பதிவு செய்யப்பட வேண்டுமாயினும், அதற்கான மாதிரிப் படிவம் பயன்படுத்தப்பட்டிராததுடன், பேணப்பட்ட கேள்விகளைத் திறப்பதற்கான அறிக்கையைத் திறக்கும் குழுவினது அங்கத்தவர் எவரும் கைச்சாத்திட்டிருக்கவுமில்லை.

(iii) கேள்விகளுக்கான ஆவணங்களில் உள்ளடக்கப்பட்ட மாதிரி வடிவங்களுக்கமைய உற்பத்தி செய்யும் நாட்டிற்கு வெளியே குறித்த மின்தூக்கியைப் பயன்படுத்துவது தொடர்பான செயலாற்றல் சான்றுறுதியையும் ஏற்றுக் கொள்ளப்பட்ட சுயாதீன பரிசோதனை நிறுவனம் ஒன்றிடமிருந்து பெறப்பட்ட இயந்திரம் முழுவதற்குமான பரிசோதனைச் சான்றிதழையும் கேள்வியைச் சமர்ப்பித்தவர் சமர்ப்பிக்காதபோதும், அது கருத்திற் கொள்ளப்படாது கேள்வியை வழங்கியவர் தெரிவு செய்யப்பட்டிருந்தார்.

(iv) தொழில்நுட்ப மாதிரி வடிவங்களில் குறிப்பிடப்பட்டவாறு ஒப்பந்தம் வழங்கப்பட்ட நாள் முதலாக 14 நாட்களுக்குள்ளும் வேலை ஆரம்பிக்கப்படுவதற்கு முன்பாகவும் தெரிவு செய்யப்பட்ட கேள்வியைச் சமர்ப்பித்தவரால் பின்சாரப் பொறியியலாளரின் அங்கீகாரத்திற்காக Working Drawings சமர்ப்பிக்கப்பட வேண்டுமாயினும், அத்தேவை பூர்த்தி செய்யப்படவில்லை.

(v) தொழில்நுட்ப மாதிரிப் படிவங்களில் குறிப்பிட்டவாறு மின்தூக்கிப் பொருட்கள் (Lift Materials) குறித்த உற்பத்தி நிறுவனத்தினது தொழிற்சாலையிலிருந்து வெளியேறுவதற்கு முன்னர் பெயர் குறிப்பிடப்படும் பரிசோதர்கள் இருவரிடம் இயந்திரத்தின் துணைப்பாகங்களது நிலைமையைப் பரிசீலிப்பதற்கான (Ouality Assuaring) தொழிற்சாலைப் பரிசீலனை விஜயங்கள் (Factory Inspection) ஒப்படைக்கப்பட வேண்டுமாயினும், மின் தூக்கிப் பொருட்கள் (Lift Materials) வைத்தியசாலைக்குக் கிடைக்கப் பெற்று 9 மாதங்களின் பின்னரே அந்த விஜயம் வழங்கப்பட்டிருந்ததால் அவ்வாறானதொரு விஜயத்தால் எதிர்பார்க்கப்படும் நோக்கம் நிறைவேறவில்லை.

(vi) கேள்வியைச் சமர்ப்பித்தவர் இணங்கியவாறு, பொருட் கொள்வனவுக் கட்டளை வழங்கிய 2016 ஆகஸ்ட் 08 தொடக்கம் 8 மாதங்கள் நிறைவடையும் 2017 ஏப்ரல் 08 ஆந் திகதியளவில் 05 மின்தூக்கிகளும் வழங்கப்பட்டுப் பொருத்தப்பட்டிருக்க வேண்டுமாயினும், 03 மின்தூக்கிகள் 2018 ஆகஸ்ட் 31 ஆந் திகதியளவிலும் நிறுவப்பட்டு ஒப்படைப்புச் சான்றிதழ் வழங்கப்பட்டிருக்கவில்லை. மேலும், பிரதான கட்டுப்பாட்டு அறை (Main Control Room) மற்றும் Lift Cabin என்பவற்றுக்கிடையே தொடர்பாடல் வசதிகள் (Interphone System) வசதி வழங்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே, கேள்விகளுக்கான நிபந்தனைகளுள் தாமதக் கட்டணம் தொடர்பான நிபந்தனைகள் உள்ளடக்கப்படாததால் 01 முதல் 04 ஆண்டு கால தாமதக் கட்டணம் அறவிடப்பட முடியவில்லை.

(vii) கேள்விகளுடன் தொடர்புடைய பதிவேட்டில் குறிப்பிடப்பட்ட 14 ஆம் இலக்க வடிவமைப்பின் பிரகாரம் மின்தூக்கி Cabin ஒன்றினது அகலம் 1,500 மில்லி மீட்டர் ஆக இருக்க வேண்டுமாயினும், வழங்கப்பட்ட 1, 2, 3, 4 ஆம் இலக்க மின்தூக்கி Cabin களது அகலம் 1,200 மில்லி மீட்டர் மாத்திரமே ஆகவிருந்ததுடன், 5 ஆம் இலக்க மின்தூக்கி Cabin 1,400 மில்லி மீட்டர் அகலமுடையதாக மாத்திரமே இருந்தமை நேரடிப் பரிசோதனையின்போது அவதானிக்கப்பட்டது. உள்ளவாறான இந்த அளவைகளைக் கணக்காய்விற்கு உறுதிப்படுத்தும் சான்றுறுதியை வழங்குவதை வைத்தியசாலைப் பராமரிப்புப் பொறியியலாளர் புறக்கணித்திருந்தார்.

(viii) வழங்குநர் 2 ஆண்டுகால கட்டணமில்லாத பராமரிப்புச் சேவையை வழங்குவதற்கு இணங்கியபோதும், இந்த இயந்திரங்களை நிறுவியதன் பின்னர் பல சந்தர்ப்பங்களில் இவை தொழிற்படாது போனமையால் வழங்குநரது சேவை முறையாக அமையவில்லை என்பது உறுதிப்படுத்தப்பட்டது.

(ஆ) மீளாய்வாண்டின்போது ரூபா 58,525,000 செலவில் Digital Mammography இயந்திரம் ஒன்று கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன், அது தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் பின்வருமாறு.

(i) அரசாங்க பொருட் கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 5.3.2 ஆம் வழிகாட்டலின் பிரகாரம், கேள்விகளைக் கோரும்போது, தெரிவு செய்யப்படுபவர் நேரடியாகத் தகுதி உடையவர் என்பதை உறுதி செய்யும் நோக்கும் தகைமையும் தொடர்பான தேவையை உள்ளடக்கிய கேள்வியைத் தயாரிப்பதற்கு வசதியாக தெரிவு செய்யப்பட்டவருக்கு அவசியப்படும் உசிதமான மற்றும் குறித்த ஆரம்பத் தகவல்கள் உள்ளடங்குமாறு கேள்விகளுக்கான கோருதல் பிரசித்தப்படுத்தப்பட வேண்டும். எவ்வாறாயினும், இந்த இயந்திரத்தை வழங்குதல், நிறுவுதல், பராமரித்தல் போன்ற சகல பணிகளுக்கும் பதிலாக இயந்திரத்தை வழங்குவது மாத்திரமே கேள்வியைக் கோரப்படுகையில் பிரசித்தப்படுத்தப்பட்டிருந்தது.

(ii) அரசாங்க பொருட் கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 6.3.6 ம் வழிகாட்டலின் பிரகாரம், கேள்விகளைத் திறக்கும் போதான நடவடிக்கைகள் குறித்த மாதிரிப் படிவத்தில் குறித்துக் கொள்ளப்பட வேண்டுமாயினும், அதற்கெனக் குறிப்பிடப்பட்ட மாதிரிப் படிவம் பயன்படுத்தப்படாதிருந்ததுடன், பேணப்பட்ட கேள்விகளைத் திறக்கும் போது பயன்படுத்தப்பட்ட அறிக்கையில் கேள்விகளைச் சமர்ப்பித்தவரது அல்லது பிரதிநிதியினது கையொப்பம் பெறப்பட்டிருக்கவுமில்லை.

(iii) அரசாங்க பொருட் கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 7.11.1 ஆம் பந்தியின் பிரகாரம், தொழில்நுட்ப மாதிரி வடிவத்தின் பிரதான அம்சங்களுக்கு இணைவாக கேள்வியைச் சமர்ப்பிக்கும் சகலரதும் அட்டவணை ஒன்றை தொழில்நுட்ப மதிப்பாய்வுக் குழு தயாரித்து அதனைப் பொருட் கொள்வனவுக் குழுவிற்குச் சமர்ப்பிக்க வேண்டுமாயினும், அதற்கமைய நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(iv) கேள்வி கோரலின்போது தெரிவு செய்யப்பட்டவர் சமர்ப்பித்த கேள்வியில் குறித்த உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட வேண்டிய உள்ளூர் மற்றும் வெளிநாட்டுப் பயிற்சியும் உள்ளடக்கப்பட்டிருந்தபோதும, 2017 பெப்ரவரி 10 ஆந் திகதி இயந்திரம் வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டிருந்தபோதும், 2018 பெப்ரவரி 28 ஆந் திகதியளவிலும் அப்பயிற்சி வழங்கப்பட்டிருக்கவில்லை. எனினும், ஒப்பந்தகாரருக்கு மொத்தத் தொகையும் வழங்கப்பட்டிருந்தது.

(v) இந்த இயந்திரத்தின் மூலம் நாளொன்றிற்கு 20 மார்பகப் புற்றுநோய் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட முடியுமெனக் கணக்காய்வில் தெரிய வந்தமையால், 2017 யூன் 23 முதல் 2018 பெப்ரவரி 28 வரையான 8 மாதங்களின்போது மாதாந்தம் 20 வேலை நாட்களாகக் கருதப்பட்டு அவ்வாறு கணிப்பீடு மேற்கொள்ளப்படுமாயின் ஏறக்குறைய 3,200 பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கலாம். எவ்வாறாயினும், அக்காலப்பகுதியின்போது 449 பரிசோதனைகள் மாத்திரமே நடைபெற்றதால் இயந்திரத்தின் பயன்பாடு அதன் ஆற்றலின் ஏறக்குறைய 14 சதவீதமாகவே இருந்தது.

(இ) மீளாய்வாண்டின்போது ரூபா 21,450,000 செலவில் இரத்தப் புற்று நோய் வகைகளை இனங்காணக்கூடிய Flow Cytometer இயந்திரம் ஒன்று கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன், அது தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் பின்வருமாறாகும்.

(i) 2016 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்படுவதற்கு எதிர்பார்க்கப்பட்ட வைத்திய உபகரண நிரலில் இதற்கான மதிப்பீட்டுத் தொகை ரூபா 8 மில்லியன் ஆகவிருந்தபோதும், உள்ளவாறு செலவிடப்பட்டது ரூபா 21.45 மில்லியன் ஆகையால் மதிப்பீடு 168 சதவீதத்தால் அதிகரித்திருந்தது.

(ii) இயந்திரத்தின் மாதிரி வடிவத்திற்கான பொது நிபந்தனை (i) க்கமைய கேள்வி கோரலின்போது தெரிவு செய்யப்பட்டவர் வழங்கும் இயந்திரத்தின் வகை அல்லது மாதிரிக்குரிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபையின் பதிவு செய்யப்பட்ட சான்றிதழ் சமர்ப்பிக்கப்பட வேண்டுமாயினும், அச்சான்றிதழ் சமர்ப்பிக்கப்படாமை தொடர்பாகக் கருத்திற் கொள்ளாது ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தது.

(iii) கேள்வி கோரலின்போது முன் வந்த இருவரும் கேள்வி ஆவணங்களில் குறிப்பிடப்பட்ட முக்கிய தேவைகளுக்கேற்ப இணங்கி வரும் இயந்திரத்திற்கான கேள்விகளைச் சமர்ப்பித்திருந்ததுடன், இதற்கு முன்னர் வழங்கப்பட்ட இயந்திரம் செயற்படாது போனமையைக் குறிப்பிட்டு குறைந்த விலையைச் சமர்ப்பித்த கேள்வி நிராகரிக்கப்பட்டிருந்தது. எனினும், அவ்வாறு அது செயற்படாது போகவில்லை எனக் கணக்காய்வில் புலனாகியது. அவ்வாறே, இயந்திரத்தின் கிரயத்தையும் பராமரிப்புக் கிரயத்தையும் ரூபா 10,250,646 அதிகரித்து அதிக விலையைச் சமர்ப்பித்தவரது முன்னைய குற்றச்சாட்டுக்களை ஆராயாது அவருக்கே ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தது.

(iv) இந்த இயந்திரத்தின் மூலம் நோயைத் தீர்மானிக்கும் இரத்தப் புற்று நோய் வகை பெறுமளவு இலங்கையில் அறிவிக்கப்படாதவையாகுமெனக் கணக்காய்வில் புலனாகியதுடன், இயந்திரம் நிறுவப்பட்டதன் பின்னர் 2017 மார்ச் 01 முதல் 2018 ஏப்ரல் 30 வரையான 14 மாதங்களுக்குள் 32 பரிசோதனைகள் மாத்திரமே மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், சில மாதங்களில் பரிசோதனைகள் எதுவுமே நடைபெற்றிருக்கவுமில்லை.

(v) இந்த இயந்திரத்தின் பாவனைக்குப் பயன்படுத்தும் ரூபா 4,608,158 கிரயமுடைய 42 Antibody Vials குறித்த பிரிவைச் சார்ந்ததென்றும் அதன் மூலம் 3,390 பரிசோதனைகள் மேற்கொள்ளப்படலாம் எனவும் கணக்காய்வில் தெரிய வந்ததுடன் இதுவரை மேற்கொள்ளப்பட்ட பரிசோதனைகளது எண்ணிக்கைப் பிரகாரம் இயந்திரம் குறைவாகப் பயன்படுத்தப்பட்டிருந்ததும் அவதானிக்கப்பட்டது. அவற்றுள் ரூபா 4,319,196 கிரயமுடைய 38 Vials 2018 யூன் 30 ஆந் திகதியளவிலும் காலாவதியாகியிருந்தன.

(ஈ) மீளாய்வாண்டின்போது வைத்தியசாலைக்குத் தேவையான மீனை வழங்குவதற்கான ஒப்பந்த உடன்படிக்கை 2017 சனவரி 04 ஆந் திகதி கைச்சாத்திடப்பட்டிருந்தது. ஒப்பந்தப் பெறுமதி ரூபா 25,950,240 ஆகும். பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) அரசாங்க பொருட் கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 2.3.2 (ஆ) மற்றும் (இ) வழிகாட்டல்களின் பிரகாரம், கேள்விகளைச் சமர்ப்பித்தவர்களது முன்னைய தகைமைகளைப் பரிசீலிப்பதற்கான அழைப்பைத் தயாரித்தல், அவற்றை மீளாய்வு செய்தல், அங்கீகரித்தல் என்பவற்றுடன் மாதிரி வடிவத்தை உள்ளடக்கிய கேள்வி ஆவண வரைவுகளைத் தயாரித்தல், அவற்றை மீளாய்வு செய்து அங்கீகரித்தல் போன்றவற்றிற்குத் தொழில்நுட்ப பகுப்பாய்வு குழுவிடம் சமர்பபிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) அரசாங்க பொருட் கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 2.11.3 ஆம் வழிகாட்டலின் பிரகாரம், பொருட் கொள்வனவுக் குழு மற்றும் தொழில்நுட்ப மதிப்பாய்வுக் குழு அறிக்கைகள் என்பன குறித்த மாதிரிப் படிவததின் பிரகாரம் தயாரிக்கப்படவில்லை.

(iii) அரசாங்க பொருட் கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 2.12(அ) வழிகாட்டலின் பிரகாரம், பொருட் கொள்வனவுக் குழு மற்றும் தொழில்நுட்ப பகுப்பாய்வுக் குழு அங்கத்தவர்களது இரகசியக் காப்பு மற்றும் நடுநிலைமை தொடர்பான கூற்றுக்கள் பெறப்படவில்லை.

(iv) அரசாங்க பொருட் கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 4.3.1(அ) வழிகாட்டலின் பிரகாரம், உணவு வழங்கலுக்கான சகல தேவைகளையும் உள்ளடக்கிய மொத்தக் கிரய மதிப்பீடு தயாரிக்கப்படவில்லை.

(v) அரசாங்க பொருட் கொள்வனவு வழிகாட்டின் கோவையின் 5.3.1(அ) தொடக்கம் (ஈ) வரையான வழிகாட்டல்களின் பிரகாரம், வைத்தியசாலைச் சபை ஏற்றுக்கொள்ளப்பட்ட கேள்வி கோரல் பதிவேடுகளைப் பயன்படுத்தியிராததுடன், அதற்குப் பதிலாக பயன்படுத்தப்பட்ட கேள்விக்கான பதிவேடுகளின் யோக்கியதை தொடர்பாகத் தொழில்நுட்ப பகுப்பாய்வுக் குழு மற்றும் பொருட் கொள்வனவுக் குழு என்பன பரிசோதனைகளை மேற்கொண்டு அங்கீகாரம் வழங்கியிருக்கவில்லை.

(vi) அரசாங்க பொருட் கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 5.3.2 ஆம் வழிகாட்டலுக்கமைய, கேள்விகளைக் கோரும்போது தெரிவு செய்யப்படும் கேள்வியைச் சமர்ப்பித்தவருக்குரிய நேரடியாகத் தகைமையை உறுதி செய்யும் நோக்கங்கள், தகைமைகள் என்பன தொடர்பான தேவைகள் உள்ளடங்கிய கேள்விகளைத் தயாரிப்பதற்கு கேள்வியைச் சமர்ப்பிப்பவருக்கு அவசியப்படும் உசிதமான மற்றும் மூலத் தகவல்கள் உள்ளடங்குமாறான கேள்விகளைக் கோருவதற்கான அழைப்பு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(vii) அரசாங்க பொருட் கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 7.10 ஆம் வழிகாட்டலுக்கமைய, பின் தகைமைப் பரிசீலனைக்கான நோக்கம், கேள்வியைக் கோரும் ஆவணங்களில் தெளிவாகக் குறிப்பிடப்பட வேண்டுமாயினும், முன்னைய ஆண்டுகளின்போது சமமான வேலை வழங்கப்பட்டமை, நிதிக்கூற்றுத் தரவுகள், வைத்தியசாலை வழங்கல் தொடர்பான முன்னைய செயலாற்றல் போன்ற நோக்கங்கள் கேள்விகளைக் கோரும் ஆவணங்களில் உள்ளடக்கப்படவில்லை.

(உ) சுகாதார, போசனை, தேசிய வைத்திய அமைச்சினது பொருட் கொள்வனவுக் குழுவின் மூலம் அங்கீகரிக்கப்பட்ட ரூபா 7,620,442 மாதாந்தப் பெறுமதியுடைய உணவு நிரலுக்குப் புறம்பாக, ரூபா 2,605,056 பெறுமதியான 82 மேலதிக உணவு வகைகளை கொள்வனவு செய்வதற்கு போட்டியுடனான கூறுவிலைகள் கோரப்படாது 2016 செப்டெம்பர் 27 ஆந் திகதி மீன் மற்றும் உலர் உணவுப் பொருட்களை வழங்கும் வழங்குநருக்கே வேறொரு ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தது. அரசாங்க பொருட் கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 5.4.10 ஆம் வழிகாட்டலின் பிரகாரம், ஒப்பந்தத்தின் வருடாந்தப் பெறுமதியில் 10 சதவீதத்திற்கு செயலாற்றல் பிணை முறி பெறப்படாததுடன், வழிகாட்டல் கோவையின் 8.9.1 ஆம் வழிகாட்டலின் பிரகாரம், ஒப்பந்தகாரருடன் முறையான உடன்படிக்கையில் ஈடுபடவுமில்லை.

(ஊ) மீளாய்வாண்டின்போது ரூபா 130,380,000 செலவில் Cardiac Catherization Laboratory இயந்திரம் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. அது தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் பின்வருமாறு.

(i) அரசாங்க பொருட் கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 7.4.1 ஆம் வழிகாட்டலின் பிரகாரம், பொருட் கொள்வனவுக்கான கால அட்டவணையில் குறிப்பிடப்பட்ட காலப்பகுதிக்குள் கூறு விலைகள் பகுப்பாய்வு செய்யப்படவில்லை.

(ii) அரசாங்க பொருட் கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 8.1.1 ஆம் வழிகாட்டலின் பிரகாரம், தொழில்நுட்ப பகுப்பாய்வுக் குழுவின் பரிந்துரை தொடர்பாக பொருட் கொள்வனவுக் குழு மிகுந்த சிரத்தையுடன் எதனையும் கருத்திற் கொள்ளவில்லை.

(iii) அரசாங்க பொருட் கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 8.5.1 ஆம் வழிகாட்டலின் பிரகாரம், அமைச்சின் பொருட் கொள்வனவுக் குழுவினது தீர்மானத்தின்படி கூறு விலைக்குரிய ஒருவர் திறம்படத் தெரிவு செய்யப்பட்டிருந்ததாகவும் அதற்கு எதிராகப் புகார்கள் இருப்பின் அவற்றைச் சமர்ப்பிக்குமாறும் ஏனைய கூறுவிலையாளர்களுக்கு அறிவித்திருக்கவுமில்லை.

(iv) அரசாங்க பொருட் கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 8.9.1 ஆம் வழிகாட்டலின்படி கூறுவிலை ஏற்றுக்கொள்ளப்பட்டதன் பின்னர் உடனடியாக முறையான ஏற்றுக்கொள்ளல் கடிதம் ஒன்று கூறு விலையாளருக்கு வழங்கப்படவில்லை.

(v) இயந்திரத்தின் செயற்பாடு தொடர்பாக 5 உத்தியோகத்தர்களுக்கு இயந்திரம் உற்பத்தி செய்யப்பட்ட நாட்டில் பயிற்சியளிப்பதற்கு ரூபா 3,030,000 ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. இத்தொகை 2018 ஏப்ரல் 30 ஆந் திகதியளவில் ஒப்பந்தகாரருக்கு வழங்கப்பட்டிருந்தபோதும், இவ்வறிக்கைத் திகதி வரை அப்பயிற்சி வழங்கப்பட்டிருக்கவில்லை.

(vi) தெரிவு செய்யப்பட்ட கூறுவிலையாளரால் சமர்ப்பிக்கப்பட்ட கூறு விலை ஆவணங்களின் பிரகாரம், 2017 மார்ச் 28 ஆந் திகதியளவில் இயந்திரம் வைத்தியசாலைக்கு வழங்கப்பட்டு நிறுவப்பட வேண்டுமாயினும், இலங்கை அணுசக்தி ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் பிரமாணங்களின்படி இவ்வியந்திரம் பயன்படுத்தப்படவுள்ள வளாகத்தினது சுவரின் கன பரிமாணத்தை 300 மில்லி மீட்டர் ஆகத் தயாரிப்பதற்கு வைத்தியசாலை நடவடிக்கை எடுக்காததால் இயந்திரத்தை நிறுவுதல் 2017 ஆகஸ்ட் 18 வரை 04 மாத கால தாமதத்திற்குள்ளானதுடன் அதன் காரணமாக வழங்குநருக்கு ரூபா 478,980 கொடுப்பனவு செய்ய வேண்டியேற்பட்டது.

(எ) மீளாய்வாண்டின்போது ரூபா 3,903,000 செலவு செய்து 14 கொள்கலன்கள் (Containers) வாடகைக்குப் பெறப்பட்டிருந்தன. எனினும், அரசாங்க பொருட் கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 8.9.1 ஆம் வழிகாட்டலின் பிரகாரம் ஒப்பந்தகாரருடன் உடன்படிக்கை செய்து கொள்ளப்படவில்லை.

**6.1.2 ஒப்பந்த நிர்வாகத்தில் குறைபாடு**

---

பூந்தோட்டம் மற்றும் சுத்திகரிப்புப் பணி புரிபவர்களுக்கான வேலைத் தளத்தையும் அலுவலகத்தையும் நிர்மாணிப்பதற்கான ஒப்பந்தம் ரூபா 87,019,408 வரியற்ற ஒப்பந்தப் பெறுமதியில் 2016 நவம்பர் 09 ஆந் திகதி வழங்கப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அரசாங்க பொருட் கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 6.3.6 ஆம் வழிகாட்டலின் பிரகாரம், குறித்த மாதிரிப் படிவத்தில் கூறு விலைகளைத் திறக்கும் அறிக்கைகள் அறிக்கையிடப்பட வேண்டுமாயினும், அதற்கெனக் குறிப்பிடப்பட்ட மாதிரிப் படிவம் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. பேணப்பட்ட கூறு விலைகளைத் திறக்கும் அறிக்கையில் கூறு விலையாளரது பெயர் மாத்திரமே உள்ளடக்கப்பட்டிருந்ததுடன், கூறு விலையினது பெறுமதி, மாறுபட்ட கூறு விலைகளது கூறு விலைப் பெறுமதி, கூறு விலைப் பிணையினது பெறுமதி போன்ற தகவல்கள் உள்ளடக்கப்படவில்லை. மேலும், கூறு விலைகளைத் திறக்கும் குழுவினது ஒரு அங்கத்தவர் மாத்திரமே அவ்வறிக்கையில் கைச்சாத்திட்டிருந்தார்.

(ஆ) அரசாங்க பொருட் கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 7.8 ஆம் பந்தியின் பிரகாரம், பெறப்பட்ட சகல கூறு விலைகளும் ஆரம்ப பகுப்பாய்வுக்குட்படுத்தப்பட வேண்டும். எவ்வாறாயினும், பெறப்பட்ட 10 கூறு விலைகளில் குறைந்த விலையுடைய 4 கூறு விலைகள் மாத்திரமே பகுப்பாய்வு செய்யப்பட்டிருந்தன.

(இ) அரசாங்க பொருட் கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 7.3 ஆம் வழிகாட்டலின் பிரகாரம், கூறு விலைப் பகுப்பாய்வுக்கு மதியுரையாளர் ஒருவரது சேவை பெறப்படுமாயின் அது தொழில்நுட்பப் பகுப்பாய்வாய்வுக் குழுவினது மேற்பார்வை மற்றும் வழிகாட்டலின் கீழ் நடைபெற வேண்டுமாயினும், மதியுரை நிறுவனம் மேற்கொண்ட பகுப்பாய்வின் பொருட்டு தொழில்நுட்ப பகுப்பாய்வுக் குழுவின் மேற்பார்வையும் வழிகாட்டலும் வழங்கப்படவில்லை. மதியுரை நிறுவனத்தால் சமர்ப்பிக்கப்பட்ட பகுப்பாய்வு அறிக்கையின் அடிப்படையில் தொழில்நுட்பப் பகுப்பாய்வுக் குழு தனது பரிந்துரையைச் சமர்ப்பித்திருந்தது.

(ஈ) கூறு விலை ஆவணங்களில் குறிப்பிடப்பட்ட 4.1(j) இலக்கமுடைய கூறுவிலையாளர்களின் பொருட்டான அறிவுரையின் பிரகாரம் தெரிவு செய்யப்பட்ட 3 ஆம் குறைந்த விலையுடன் கூறுவிலையாளர் சமர்ப்பிக்க வேண்டிய கையில் உள்ள வேலைகள் தொடர்பான விபரம் மற்றும் தற்போது உள்ள வேலைகளுக்குத் தேவையான தொழிற்படு மூலதனத் தேவை பூர்த்தி செய்யப்படலாமென உறுதி செய்யும் ஆவணம் என்பன சமர்ப்பிக்கப்படவில்லை. அவ்வாறே, கூறு விலையாளர் சமர்ப்பித்த கடந்த 5 ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், கூறு விலையாளரின் நிதி நிலைமை சிறந்த நிலையில் இருக்கவில்லை என்பது உறுதிப்படுத்தப்பட்டபோதும், அவ்விடயம் கருததிற் கொள்ளப்படாது தொழில்நுட்ப பகுப்பாய்வுக் குழு இக்கூறுவிலையாளரை தெரிவு செய்வதற்கான சிபார்சை வழங்கியிருந்தது.

(உ) அரசாங்க பொருட் கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 8.9.1 ஆம் வழிகாட்டலின் பிரகாரம், ஒப்பந்த வழங்கல் கடிதம் வழங்கப்பட்டிருக்கும்போதே இரு சாராரும் உடன்படிக்கையில் ஈடுபட வேண்டுமாயினும், ஒப்பந்தம் வழங்கப்பட்டு 219 நாட்களின் பின்னரே உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது.

(ஊ) கூறுவிலை ஆவணங்களில் குறிப்பிடப்படும் 4.14 ஆம் இலக்க ஒப்பந்த நிபந்தனைகளின் பிரகாரம், ஒப்பந்தகாரர் மாதாந்த செயல் முன்னேற்ற அறிக்கையைச் சமர்ப்பித்திருக்கவில்லை. 2017 சனவரி 30 அன்று ஒப்பந்தம் ஆரம்பமாகி 2018 ஏப்ரல் 29 ஆந் திகதியளவில் பூர்த்தி செய்யப்படுவதற்குத் திட்டமிடப்பட்டிருந்தபோதும், ஊழியர்களையும் நியமங்களுடன் கூடிய மூலப்பொருட்களையும் ஒப்பந்தகாரர் வழங்காமையால் ஒப்பந்தத்திற்கான செயல் முன்னேற்றம் எதிர்பார்த்தவாறு பூர்த்தி செய்யப்பட முடியாது போனதுடன், 2018 ஏப்ரல் 06 ஆந் திகதியளவில் First Flow Slab வரை மாத்திரமே வேலை முடிவடைந்திருந்தது.

(எ) கூறு விலை ஆவணங்களில் குறிப்பிடப்பட்ட 14.5 ஆம் இலக்க Contract Data க்கமைய, கொடுப்பனவு செய்யக்கூடிய இடைக்கால விலைப் பட்டியலது குறைந்த பெறுமதி ரூபா 3,200,000 ஆகும். எவ்வாறாயினும், ஒப்பந்தகாரர் சமர்ப்பித்த இரு இடைக்கால விலைப்பட்டியல்களான முறையே ரூபா 1,733,666 மற்றும் ரூபா 1,708,771 என்பவற்றிற்கும் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

## 6.2 தீர்த்து வைக்கப்படாத கணக்காய்வுப் பந்திகள்

2017 யூன் 09 ஆந் திகதிய பொது முயற்சிகள் தொடர்பான குழு வழங்கிய கட்டளை நிறைவேற்றப்படடிராத சந்தர்ப்பங்கள் வருமாறு.

பணிப்பாளர், பிரதிப் பணிப்பாளர், கணக்காளர் போன்ற பதவிகளுக்கான தகைமைகள் தொடர்பாகத் தேவையான திருத்தங்களைச் செய்ததன் பின்னர் 2 மாதங்களுக்குள் ஆட்சேர்ப்பு நடைமுறைக்கான அங்கீகாரம் பெறப்பட வேண்டுமென பொது முயற்சிகள் தொடர்பான குழு கட்டளை வழங்கியிருந்தபோதும், இவ்வறிக்கைத் தினம் வரை அந்த அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

## 7. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வப்போதுபோது வைத்தியசாலைச் சபையின் தலைவரது கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகளில் முகாமைத்துவத்தின் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| **கட்டுப்பாட்டுத் துறை** | **அவதானிப்புகள்** |
| --- | --- |
| (அ) நிலையான சொத்துப் பதிவேடு | கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட நிலையான சொத்துக்களது கணனி அச்சுப் பதிவேட்டில் ஆண்டின்போது கொள்வனவு செய்யப்பட்ட நிலையான சொத்துக்கள் தொடர்பான தகவல்கள் மாத்திரமே உட்சேர்க்கப்பட்டுள்ளதுடன், சகல நிலையான சொத்துக்களும் நேரடியாக இனங்காணப்பட்டு அவற்றின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டுப் பதிவு செய்யப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. |
| (ஆ) கையிருப்புக் கட்டுப்பாடு | காலாவதியாகிய கையிருப்பு சரிவர இனங்காணப்படவில்லை. |
| (இ) பதவியணி நிர்வாகம் | முறையான ஆட்சேர்ப்பு நடைமுறை தயாரிக்கப்பட்டு அதனை அங்கீகரித்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்காமை. |
| (ஈ) ஒப்பந்த நிர்வாகம் | ஒப்பந்த வேலை தாமதமின்றி நிறைவேற்றப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமை மற்றும் அரசாங்க கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் சில ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படாமை. |
| (உ) கொள்வனவுக் கட்டுப்பாடு | தேவையைச் சரிவர இனங்காணாது வைத்திய உபகரணங்களைக் கொள்வனவு செய்தலும் உடன்படிக்கை நிபந்தனைகளின் பிரகாரம் வழங்குநர்களது சேவையைப் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்காமையும். |
| (ஊ) கணக்கீடு மற்றும் கணனி மென் அணிப் பாவனை | (i) நாட்குறிப்பு இலக்கம், கொடுக்கல் வாங்கல் தொடர்பான விபரம் மற்றும் ஒரே விடயம் இரு தடவைகள் பதிவு செய்யப்படுதல் தொடர்பான விபரம் கணனி முறைமையில் உள்ள பேரேட்டுக் கணக்குகளில் குறிப்பிடப்படாமை.<br>(ii) 2017 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 24,125,003 கூட்டுத் தொகையுடைய 3 நாட்குறிப்புகளுக்கு அங்கீகாரம் பெறப்படாமை.<br>(iii) 2017 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு 27 கடன் பட்டோர் கணக்குகளில் ரூபா 27,373,267 செலவு மீதி இருத்தல் |

(iv) 2017 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு 26 கடன் கொடுத்தோர் கணக்குகளில் ரூபா 21,567,527 வரவு மீதி இருத்தல்.

(v) வைத்தியசாலைக் கட்டண வருமானத்தைக் கணக்கிலிடுவதற்கு நிறுவப்பட்ட Systolic கணனி மென் அணி முறைமையில் பல்வேறு வகை வருமானத்தைக் கணக்கிலிடுவதற்காக வெவ்வேறான கணக்குச் சுட்டுக்களை (Code) அறிமுகஞ் செய்திராமை, ஒரு வருமானப் பேரேட்டுக் கணக்குச் சுட்டின் கீழ் பல்வேறு வகை வருமானம் கணக்கிலிடப்பட்டமை, அவ்வாறான பேரேட்டுக் கணக்கு மீதி சிலவற்றின் கூட்டுத் தொகை மூலம் பரீட்சை மீதி தயாரிக்கப்பட்டுள்ளமை, அந்த முறைமையில் வைத்தியசாலைக் கட்டணம் திருப்பிச் செலுத்தப்படுவதைக் (Refund) கணக்கிலிடுவதற்கான விதி முறைகள் இனங்காணப்பட்டிராமை.

(vi) பணம் கொடுப்பனவு செய்யப்படும் வார்ட்டுகளில் சிகிச்சை பெறும் ஒவ்வொரு நோயாளியிடமிருந்து அறவிடப்பட்ட வைத்தியசாலைக் கட்டணம் மற்றும் தொழில்சார் கட்டணம் என்பன வெவ்வெறாக Systolic கணனி முறைமையின் மூலம் பெறப்பட முடியாமை மற்றும் தொழில்சார் கட்டணத்தை கணக்கிலிடுவது தொடர்பான விதிமுறைகளுடன் கூடிய முறையான நிர்வாக முறைமைகளை அறிமுகஞ் செய்திராமை.

(vii) மீளாய்வாண்டின்போது வைத்தியர்கள் மற்றும் ஏனைய பதவியணியினரின் பொருட்டு நோயாளர்களிடமிருந்து அறவிட்ட தொழில்சார் கட்டணம் ரூபா 341,094,920 ஆகும். இதில் ரூபா 511,644 மாத்திரமே வைத்தியசாலை வருமானத்தில் செலவு வைக்கப்பட்டமை மற்றும் தொழில்சார் கட்டண அறவீடு, திருப்பிச் செலுத்தும் பணம் தொடர்பாகப் பதவியணியினரை ஈடுபடுத்தல், பதவியணியைப் பணியில் அமர்த்தல், கணனி மென் அணியைப் பேணுதல், வங்கிக் கணக்கைப் பேணுவதற்கான கிரயம் மற்றும் பிற மேந்தலைக் கிரயம் தொடர்பான பகுப்பாய்வு என்பன நடைபெறவில்லை.

| | | |
|---|---|---|
| (எ) | நிதிக்கட்டுப்பாடு | இரத்துச் செய்யப்பட்ட காசோலைகளின் முன் பக்கத்தே ‘‘இரத்துச் செய்யப்பட்டது’’ எனக் குறிப்பிடப்படாமை |
| (ஏ) | வாகனக் கட்டுப்பாடு | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் வாகனங்களது எரிபொருள் நுகர்வு பரிசீலிக்கப்படாமை. |